**12.07.2023 OS.No.202/2017**

வா.சா. **1** பெயர்: அண்ணாதுரை

<u>சாட்சி ஆஜர். பிரமாண செய்யப்பட்டார் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள அதே சொத்து விவரத்தை அப்படியே குறிப்பிட்டு 2010 வருடம் என் பெயரில் பொது அதிகார ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், சக்குபந்தியில் கோபால் மற்றும் கோவில் மட்டும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சர்வே எண்.9-ல் உள்ள 1.65 ஏக்கர், மற்றும் அதே சர்வே எண்ணில் 1.61 1/2 ஏக்கர் விஸ்தீரண பரப்புகளுக்கு வா.சா.ஆ.1 ஆவண பின்னிட்டு உட்பிரிவுகள் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துகளுக்கு எனது பெயரில் பொது அதிகாரம் ஏற்படும் வகையில் எனது மாமனாரு பெயரிலும் அவர்கள் வாரிசு பெயர்களிலும் வருவாய் துறையில் மாற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றால் என் மாமனார் பெயரில் கூட்டு பட்டா உள்ளது. கூட்டு பட்டா என்பது கிரயம் கொடுத்து மீதம் வைத்து இருந்த பழனி என்பவர் பெயரிலும் என் மாமனார் பெயரிலும் உள்ளது. உள்ளதாக குறிப்பிடும் கூட்டு பட்டாவினை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொது அதிகார ஆவணத்துடன் கூட்டு பட்டா இணைக்கவில்லை என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தில் கூட்டு பட்டா இருந்த விவரத்தை குறிப்பிட்டுயுள்ளோமா என்றால் இல்லை. 2010-ல் கூட்டு பட்டா இருப்பதாக என் மாமியார் கூறியிருந்தார் நான் நேரடியாக பார்க்கவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு முன்பு ஜய்யப்பன் பெயரை சேர்த்து கூட்டு பட்டா எதுவும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. 2015-க்கு முன்பு இருந்ததாக குறிப்பிடும் வருவாய் துறை ஆவணகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி ஊத்தங்கரை உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்து குறித்து அ.வ.எண்.94/2015 என்ற எண்ணில் வழக்கிட்டு இருந்து பின்னிட்டு இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அ.வ.எண்.23/2019 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவண வழக்கு தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு தற்போது இந்நீதிமன்றதில் உள்ளது என்றால் ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் 1 ஏக்கர் 65 செண்டு பூமியின் கிழக்கில் வெங்கடேசன், மேற்கில் சுப்பிரமணி, தெற்கில் ஆண்டி, வடக்கில் கோபால் மற்றும் கோவில் ஆகியவர்களின் பூமி உள்ளது. தாவா சொத்துகளில் 1 ஏக்கர் 61 1/2 செண்டு பூமியின் கிழக்கில் வெங்கடேசன், மேற்கில் சுப்பிரமணி, தெற்கில் செல்லன், வடக்கில் பாதுகாக்கப்பட்ட வனபகுதி ஆகியவர்களின் பூமி உள்ளது. 1 எக்கர் 65 செண்டு பூமிக்கு வடக்கில் 1 ஏக்கர் 61 1/2 பூமி உள்ளது. மேற்படி இரண்டு சொத்துகளுக்கும் இடையே பிரிப்பதை போன்று வரப்பு ஏதேனும் உள்ளதா என்றால் வடக்கில் சிறு பகுதியில் வாய்கால் உள்ளது. வாய்காலுக்கு மேற்கிலும், தெற்கிலும் தாவா இரண்டு இன சொத்துகள் உள்ளது. தாவா வழக்குடன் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோரிய மனுவினை எந்த நோக்கதிற்காக தாக்கல் செய்துயுள்ளோம் என்றால் அத்து கல்லை பிடிங்கி விட்டதால் எல்லை தெரிவதற்காக தாக்கல் செய்து இருந்தேன். பிடிங்கியதாக குறிப்பிடும் அத்து கல் எந்த திசையில் இருந்து அகற்றப்பட்டது என்பதை திசையை குறிப்பிட்டு மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு இல்லை. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். அவ்வுத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு ஏதேனும் செய்யப்பட்டு உள்ளதா என்றால் மேல்முறையீடு செய்துள்ளேன். 2015 வரையில் தாவா சர்வே எண்ணில் உள்ள மொத்த விஸ்தீரணத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பழனி கவுண்டர் பெயரில் மட்டுமே இருந்தது என்றால் சரியல்ல என் மாமனார் பெயரிலும் இருந்தது. ஆவணங்கள் இருந்த வரையில் தாக்கல் செய்துள்ளேன். வேறு ஆவணங்கள் கிடைக்கும் பட்சத்தில் தாக்கல்

செய்கிறேன். பிரதிவாதிகள் 2015-ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நில அபகரிப்பு குற்ற பிரிவில் புகார் கொடுத்து இருந்தேன். எங்கள் நிலத்தை அபரிகரிக்க முயற்சி செய்வதாக புகார் கொடுத்தேன். நிலத்தை மீட்டு தருமாறு நில அபகரிப்பு குற்ற பிரிவில் புகார் கொடுத்து இருந்தேனா என்றால் இல்லை. கொடுத்ததாக குறிப்பிடும் புகாரினை வழக்கில் தாக்கல் செய்துயுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் குறிப்பிடுவது போல் புகார் மனுவை தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல. கொடுத்தாக குறிப்பிடும் புகாரில் சொத்தினை மீட்டு தருமாறு குறிப்பிட்டிருந்தோம் என்றாலும் ஆகவே அதனை தாக்கல் செய்தால் அவ்விவரம் தெரிந்து விடும் என்பதனால் மறைத்துயுள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் பழனி கவுண்டர் நிறுத்தி வைத்த சொத்து கிழக்கில் உள்ளது. தாவா சொத்தையும் அவரின் மீதி சொத்தையும் பிரிப்பதை போன்று வரப்பு உள்ளதா என்றால் வாய்கால் உள்ளது. மேற்படி வாய்காலுக்கு கிழக்கில் பழனி கவுண்டர் சொத்தும், மேற்கில் எங்கள் சொத்தும் உள்ளது. ஐயப்பன் பெயரில் கிரைய பத்திரம் ஏற்பட்டிருந்தாலும் சொத்தின் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றாலும் அவரும் அவர் வாரிசு உரிமையும் கோரியது இல்லை என்றாலும் நான் பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தி எந்த விவரம் தெரியாமல் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. 2010-ல் பொது அதிகாரம் ஏற்படுத்தி 2015-ல் பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் அவர்கள் அ.வ.எண்.23/2019 வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு நில அபகரிப்பு பிரிவில் பொய்யாக புகார் கொடுத்தும் செல்வாக்கின் அடிப்படையில் பட்டாவில் பெயரை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எவ்வித உரிமையோ பாத்தியமோ இல்லை என்றாலும் மோசடியாக ஆவணங்கள் ஏற்படுத்தி வழக்கிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. பழனி கவுண்டர் கிரையம் பெற்றது முதல் தாவா சொத்துக்கள் முழுவதும் அவர்கள் வசமே இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் கூட்டு பட்டா இருந்த விவரத்தை சொல்லியுள்ளேன். தாவா சொத்தில் எனக்கு எவ்விதமான உரிமையில்லை என்றாலும் பொய் வழக்கு தாக்கல் செய்துயுள்ளேன் என்றாலும் சரியல்ல.

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai